<u>உதவி அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

**SC .No.87/2016**

**01.07.2026**

**பெயர்** : **மகாலிங்கம் (PW 15 )**

**த/பெ.** :

**வயது** :

**தொழில்** : **காவல் ஆய்வாளர்**

**முகவரி** :

**<u>முதல் விசாரணை</u>**

நான் தமிழ்நாடு அரசு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்று ஈரோட்டில் வசித்து வருகிறேன். கடந்த 27.03.2014 ம் தேதியன்று உடுமலைப்பேட்டை குற்றபிரிவு காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது உடுமலைப்பேட்டை குற்றபிரிவு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. சுப்பிரமணி அவர்கள் உடுமலைப்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 240/2014 சட்டபிரிவு 394, r/w 397 இ.தச வழக்கை பதிவு செய்து விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை நான் அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இரவு 7 மணிக்கு சம்பவ இடமான கௌரியம்மாள் தோட்டத்திற்கு அருகில் உள்ள PAP வாய்க்கால் மேட்டிற்கு சென்று சாட்சிகள் சின்னத்துரை மற்றும் குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு அ.சா.ஆ 11 பார்வை மகஜர், அ.சா.ஆ 12 மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்னிட்டு இவ்வழக்கின் சம்பவ சாட்சிகளான கோகிலா, பவளாயி, பிரபாகரன், ரவிசங்கர் , சின்னத்துரை , பால்சாமி , சின்னத்துரை மற்றும் குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு சம்பவ இடத்தில் கிடந்த செல்போனை சாட்சி கோகிலா என்பவர் காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஒப்படைத்த படிவம் 91 ன் கீழ் கைப்பற்றி கைப்பற்றினேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 29.03.2014 ம் தேதியன்று சாட்சிகள் பால்சாமி ,

ராஜ்குமார், பிரேம்நாத் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.03.2014 ம் தேதியன்று இரவு ரோந்தின் போது தாராபுரம் ரோடு தாஜ் தியேட்டர் அருகே நான் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த போது Tata Sumo Grand என்ற வாகனத்தில் வந்த எதிரிகளான கல்லுபாலன், முருகன், சேகர் என்கிற சந்திரசேகரன் மற்றும் அலெக்ஸ் என்ற அலெக்ஸ் பாண்டியன் ஆகியோர்களை அந்த வாகனத்தில் இருந்து இறக்கி விசாரித்த போது அந்த வாகனத்தை ஆய்வுசெய்த போது அந்த வாகனத்தில் கத்தி , முகமூடி போன்ற ஆயுதங்கள் இருந்ததாலும் பொதுமக்கள் அதிகமாக கூடிய காரணத்தினால் அவர்களை வாகனத்துடன் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விட்டேன். இரவு 23.15 மணிக்கு அவர்கள் ஒவ்வொருவரையும் கைதுக்கான காரணம் கூறி கைது செய்தேன். அவர்களை நான் விசாரணை செய்த போது ஒவ்வொரு எதிரிகளும் யாருடைய வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராமதாஸ், முருகானந்தம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். 23.15 மணி முதல் 00.15 மணி வரை 4 ம் எதிரியான பாலா என்ற எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 00.15 மணி முதல் 00.45 மணி வரை எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த இரண்டு தாலி கொடிகள் , ஒரு கத்தி மற்றும் ஒரு குரங்கு தொப்பி ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த குரங்கு தொப்பி சான்று பொருள் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 00.45 மணி முதல் 2.30 மணி வரை முருகன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். 10.30 மணி முதல் 11.30 மணி வரை சந்திரசேகரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13 மணி முதல் 14 மணி வரை அலெக்ஸ என்ற அலெக்ஸ் பாண்டியனை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் ராமதாஸ் மற்றும் முருகானந்தம் என்பவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவுசெய்தேன். பின்னிட்டு எதிரிகளை திரேக பரிசோதனை செய்து வழக்கு சொத்துக்களுடன் தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னிட்டு 02.04.2014 ம் தேதியன்று சாட்சி ஈஸ்வரன், ஆறுமுகம், மற்றும் மணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.04.2014 ம் தேதியன்று புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது

இ.த.ச பிரிவுகள் 394, 397 r/w 109 இ.த.ச கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து உடுமலைபபேட்டை நீதித்துறை நடுவர் எண்1 க்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் அடையாளர் தெரியாத நபர்கள் 3 பேர் என்று குறிப்பிடப்பட்டு சொல்லப்பட்டுள்ளது என்றுசொன்னால் அது சரிதான். அவர்கள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தின் பதிவு எண் குறித்து முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். புகார் கொடுத்தவருக்கு போதிய கல்வி அறிவு இல்லாத காரணத்தினால் அது குறித்து சொல்லவில்லை. புகார் கொடுத்த நபர் அவர் கொடுத்த புகாரில் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து செய்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்களின் தோராயமான உயரம், வயது, நிறம், தோற்றம் ஆகியவை குறித்து புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். அது போன்று எனது விசாரணையிலும் அ.சா1 மற்றும் அ.சா 2 அவர்களிடமும் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் விசாரித்தேன், ஆனால் கடைசி வரையிலும் எனது விசாரணையில் அது பற்றி சொல்லவில்லை. சம்பவ இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்த செல்போனின் நிறுவனத்தின் பெயர், அதன் மாடல் குறித்து அ.சா1 மற்றும்அ.சா 2 என்னிடம் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். படிவம் 91 ல் செல்போனின் IME No. Sim Card Serial No போன்ற எந்த விவரத்தையும் நான் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். அவ்வாறு நான் அந்த விவரங்களை சொல்ல வேண்டும் என்றால் ஆய்வுக்கு கொடுத்து அறிக்கை பெற்ற பின்னர் தான் அவ்வாறு சொல்ல இயலும். அவ்வாறு ஆய்வுக்கு கொடுத்து அறிக்கை பெற்ற பின்னரும் IME No. பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். அ.சா1 காவல் நிலையத்தில் ஒப்படைத்த செல்போனை தனியாக ஜாபிதா தயார் செய்து அதனை மூடி சீல் வைத்து ஆய்வுக்கு உட்படுத்த அனுப்பி வைத்தேனா என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் யாருடைய பாதுகாப்பில அந்த செல்போன் வைக்கப்பட்டிருந்தது என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. அன்றைய தினம் காவல் நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்தேன். அவ்வாறு அந்த கைப்பேசி நிலைய எழுத்தரிடம்

ஒப்படைத்ததாக என்னுடைய வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றுசொன்னால் அது சரிதான். ஆனால் அவ்வாறு அந்த விவரத்தை சொல்லமாட்டார்கள். இந்த விவரங்கள் அனைத்தும் வழக்கு நாட்குறிப்பேட்டில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றுசொன்னால் அது சரிதான். உண்மையிலேயே செல்போனை கைப்பற்றி ஆய்வுக்கு உட்படுத்தியிருந்தால் அது யார் முன்னிலையில் அந்த செல்போன் கைப்பற்றப்பட்டது, அந்த செல்போனின் IME No.,Sim Card Serial No போன்ற விவரங்களை படிவம் 91 ல் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றும், அவ்வாறு கைப்பற்றப்படாத காரணத்தினால் தான் அந்த விவரங்களை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் பயன்படுத்திய கத்தியை கைப்பற்றியதாக சொல்லும் நான் அ.சா1 விடம் அந்த கத்தியின் மாடல் குறித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரணை செய்தேன் ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. எதிரிகளிடம் இருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் தங்கநகைகள் உண்மையானதா அல்லது போலியானதா என்பது பற்றி என்னால் சொல்ல இயலாது என்று சொன்னால் அது சரிதான். அதே போன்று தாலிகொடியை பார்த்து அதன் எடை குறித்து என்னால் சொல்ல இயலாது என்று சொன்னால் அது சரிதான். அதற்கான தனி பயிற்சி எதுவும் நான் பெறவில்லை என்று சொன்னால் அது சரிதான். ஆனால் அப்போதே இந்த வழக்கில் 5.7 கிராம் தங்க நகை, 6–1/2 பவுன் தாலி கொடி என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். அ.சா1 ஐ விசாரிக்கும் போது அவர் தான் அந்த விவரத்தை சொன்னார். நான் அந்த நகை குறித்து ஆய்வுகக்கு உட்படுத்தினேனா என்றால் ஆய்வுக்கு உட்படுத்தினேன். அ.சா.1 எடுத்து வந்து ஆஜர் செய்ததாக சொல்லப்படும் கைப்பேசியின் Sim Card ல் எதிரிகள் பெயர் இல்லை என்று சொன்னால் அது சரிதான். ஆனால் அது வேறு ஒரு நபரின் பெயரில் உள்ளது. செல்போனின் உரிமையாளர்கள் இவர்கள் இல்லை என்று சொன்னால் அந்த செல்போனை இவர்கள் தான் பயன்படுத்தி வந்தார்கள். நான் சம்பவ இடத்தில் செல்போன் கிடந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.இந்த வழக்கின் 4ம் எதிரியான பாலு என்ற கல்லு பாலன் என்பவருக்கு காவல் துறையை சேர்ந்த அருள் முருகன் என்பவர் Gun Man ஆக பணிபுரிந்தார் என்று சொன்னால் அது சரிதான். மெய்க்காப்பாளரின் பணி என்பது 24 மணிநேரமும் அந்த பாலு என்ற கல்லுபாலன் என்பவருடன் உடன் இருக்க வேண்டும்

என்று சொன்னால் அது சரிதான். அவ்வாறு அந்த மெய்க்காப்பாளர் யாருக்கு மெய்க்காப்பாளராக இருந்து வருகிறாரோ அவர் யாரை சந்திக்கின்றார், எங்கெங்கு செல்கின்றார் , மேலும் அன்றாட நடவடிக்கைகள் குறித்து அவர் பராமரிக்கும் நோட்டில் குறிப்பிட வேண்டும், மாவட்ட கண்காணிப்பாளருக்கு அவருக்குண்டான ஆய்வாளருக்கும் தனி அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும் என்றும், மேலும் உடுமலைப்பேட்டை சரக காவல் ஆய்வாளருக்கும் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொன்னால் அது சரிதான். நான் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அந்த Gunman 4ம் எதிரியுடன் உடன் இருக்கும் வரை நான் நடந்ததாக சொல்லும் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. Gun man உடன் இருக்கும் போது 4ம் எதிரி எந்தவிதமான குற்ற செயலிலும் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை என்று மறுத்து சாட்சியம் அளிப்பது இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் அது தவறு. மெய்க்காப்பாளருக்கு யாருக்கு மெய்க்காப்பாளராக இருந்து வரும் நபருக்கு உத்தரவுகள் பிறப்பிப்பது யாருக்கு மெய்க்காப்பாளராக இருந்து வருகிறாரோ அந்த மெய்க்காப்பாளருக்கு உத்தரவுகள் பிறப்பிக்க இயலாது என்றும், உடுமலைப்பேட்டை காவல் ஆய்வாளர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மட்டுமே மெய்க்காப்பாளருக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என்று சொன்னால் அது சரியல்ல. மெய்க்காப்பாளருக்கு உத்தரவுகள் பிறப்பிப்பது காவல் உயர் அதிகாரிகளால் தான் பிறப்பிக்க இயலும் என்றும், நான் வழக்கிற்காக யாருக்கு மெய்க்காப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளாரோ அவரால் தான் உத்தரவுகள் பிறப்பிக்க இயலும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. ஒரு மெய்க்காப்பாளர் யாருக்கு மெய்க்காப்பாளராக இருக்கின்றாரோ அவரை விட்டு அவரது பாதுகாப்பு பணியில் இருந்து விலகும் போது அவர் வைத்திருந்த பாதுகாப்பு ஆயுதத்தை சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற விவரம் காவல் நிலைய ஆணையில் கண்டுள்ளது என்று சொன்னால் அது சரிதான். அவ்வாறு அந்த மெய்க்காப்பாளர் அன்றைய தினம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரிடம் அவருக்கு வழங்கப்பட்ட ஆயுதத்தை தனிஅறிக்கையுடன் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் அது பற்றி தற்போது ஞாபகம் இல்லை. ஆனால் ஒப்படைத்து இருப்பார். மெய்க்காப்பாளரின் அன்றாட நடவடிக்கைகள் குறித்த பதிவேடு மற்றும் பாதுகாப்பு ஆயுதத்தை ஒப்படைத்தற்கான தனி அறிக்கை போன்ற

ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் நான் விசாரித்தேன். ஆனால் தனி அறிக்கை எதுவும் பெறப்படவில்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் 4ம் எதிரி வரவில்லை என்றும், நான் சொல்வது வாகன தணிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும், நான் சொன்ன நேரத்தில் 4ம் எதிரி மெய்க்காப்பாளருடன் வேறு இடத்தில் வேறு பணியில் இருந்தார் என்றும், அந்த காரணத்தினை நன்கு தெரிந்திருந்தும் வேண்டும் என்றே அந்த மெய்க்காப்பாளரின் தனிஅறிக்கையுடன் ஆயுதங்களை ஒப்படைப்பு செய்திருப்பார் என்றும், அந்த விவரங்கள் தற்போது ஞாபகம் இல்லை என்று விசாரணை அதிகாரியாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. எங்கள் காவல் நிலையம், உடுமலைப்பேட்டை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் இருந்து 1 கி.மீ தொலைவில் தான் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். 1 கி.மீ தொலைவில் இருக்கும் உடுமலைப்பேட்டை கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக சேர்க்காமல், 7 கி.மீ தொலைவில் இருக்கும் பெரியகோட்டை கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக சேர்க்க தனிப்பட்ட காரணம் உண்டா என்றால் இல்லை. உடுமலைப்பேட்டை கிராம நிர்வாக அலுவலர் நாங்கள் ஏற்கனவே தயார் செய்திருந்த ஆவணங்களில் கையெழுத்து செய்ய மறுத்து வந்தார் என்றும், அதனால் நாங்கள் உடுமலைப்பேட்டை கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக சேர்க்காமல், பெரிய கோட்டை கிராம நிர்வாக அலுவலரிடம் சாட்சியாக கையொப்பம் பெற்று சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல. பார்வை மகஜர், கு.வி.மு. 161(i) கீழான வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவை யாரால் எழுதப்பட்டது என்று கேட்டால் நான் சொல்ல சொல்ல காவல் உதவி ஆய்வாளர் சாஸ்தா எழுதினார். நான் சொல்ல சொல்ல காவல் உதவி ஆய்வாளர் சாஸ்தா எழுதினார் என்ற குறிப்பு எதுவும் இல்லை என்றும் , அவரிடம் எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றும், மேலும் அவரை இந்த வழக்கின் சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்று சொன்னால் விசாரணை செய்தேன் ஆனால் நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. கைப்பற்றுதல் மகஜர், பார்வை மகஜர் மற்றும் 161ன் கீழான வாக்குமூலங்கள் வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டுள்ளன என்றும், அவை அனைத்தும் வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டவையாக கண்டுள்ளது என்று சொன்னால் அது சரிதான். ஆனால் அவர் தான் எழுதினார். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்

நிலையததில் வைத்து பின்னிட்டு என்னால் உருவாக்கப்பட்டவை என்று சொன்னால் அது சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்று கேட்டால் நான் சொல்ல சொல்ல உதவி ஆய்வாளர் சாஸ்தா தட்டச்சு செய்தார். அவர் தான் தட்டச்சு செய்தார் என்ற குறிப்பு ஒப்புதல் வாக்குமூலத்தில் இல்லை என்று சொன்னால் அது சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன இடத்திலும் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் அவர்கள் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் என் முன்னிலையில் கொடுக்கவில்லை என்றும், அவர்களிடம் இருந்து எந்தவிதமான சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும் என்னால் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையே பின்னிட்டு தயார் செய்யப்பட்டு பதிவு செய்த காரணத்தினால் தான் ஒரு நாள் காலதாமதாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. 4ம் எதிரிக்கு உயிருக்கு ஆபத்து இருப்பதாக கருதி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் மெய்க்காப்பாளர் வேண்டும் என்று கேட்டதன் காரணமாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் தான் பாதுகாப்பு வழங்கப்பட்டது என்று சொன்னால் அது சரிதான். இறந்து போன 4ம் எதிரி குண்டர் சட்டத்திற்கு காரண வழக்கு வேண்டும் என்பதற்காக எங்கள் காவல் துறையை சேர்ந்த மகேஸ் என்பவரின் ஏற்பாட்டின் பேரில் தான் இந்த பொய் வழக்கு புனையப்பட்டு தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. சொன்ன நேரத்திலும்., சொன்ன இடத்திலும் எதிரிகளிடம் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றும், அதன் பேரில் எந்தவிதமான வழக்கு சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், இந்த வழக்கில் எனது விசாரணையில் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களும், வழக்கு சொத்துக்களும் பின்னிட்டு வழக்கின் தோதுக்கேற்ப என்னால் காவல் நிலையத்தில் வைத்தே தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கிற்கும், இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளுக்கும், இந்த வழக்கில்

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒம்/−மு.தனபால்
உதவி அமர்வு நீதிபதி,
உடுமலைப்பேட்டை